உ
சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஹூ ஆனி மீ ௨௰௯ (1944 ஜுலை மீ 13 வியாழக்கிழமை) [இல ௨அ

## புதிய ஆலோசனையின்மீது மந்திரிமார் சீற்றம்

### அரசியற் சீர்திருத்தக் கமிஷனின் அதிகாரம்

### 1943ம் வருடத்திய வாக்குறுதி மீறப்படுகிறதாம்

இவ்வருடக் கடைசியில் இலங்கைக்கு வரும் அரசியற் சீர்திருத்தக் கமிஷன் இலங்கையின் அரசியற் சீர்திருத்த விஷயமாகச் சிறுபான்மை வகுப்பினர்உட்பட்ட பல்வேறு நலன்களுடனும் கலந்தாலோசிக்கப் பூரண சந்தர்ப்பமளிக்க வேண்டும் என்று அரசாங்கம் யூலை மாதம் 5ம் திகதி விடுத்த அறிக்கையை ஆட்சேபிக்க மந்திரிமார் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றனரென்று அறியப்படுகிறது.

திங்கட்கிழமை பின்னேரம் அரசாங்கசபையிலுள்ள ஓர் அறையில் மந்திரிமார் ஒரு மகாநாடு கூடி இவ்விதம் முடிவு செய்தனர். மகாநாட்டுக்கு ஏழு மந்திரிகளும் வந்திருந்தனர்.

கமிஷன் மேற்கொள்ளவிருக்கும் முறை சம்பந்தமான 1943ம் வருடத்திய பிரகடனத்தின் அதிகாரத்துக்குப்புறம்பானதாக இருப்பதால் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லையென்றும் அந்தப் பிரகடனத்துக்கு மந்திரிமார் கூறிய அர்த்தம் குடியேற்றநாட்டு மந்திரியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றதென்றும் குடியேற்றநாட்டுமந்திரிக்குஉடனே அறிவிக்கவும் மந்திரிமார் தீர்மானித்திருக்கின்றனர்.

#### மூன்று நிபந்தனைகள்

கீழ்க்காணும் மூன்று நிபந்தனைகளும் 1943ம் வருடத்திய பிரகடனத்தில் அடங்கியிருந்தனவென்பதைத் தாம் ஸ்பஷ்டமாகத் தெளிவுபடுத்தியிருப்பதாக மந்திரிமார் கூறுகின்றனர். (1) மந்திரிமாரால் வகுக்கப்படும் அரசியல்திட்டம் பிரகடனத்தின் எல்லைகளுக்குட் கட்டுப்பட்டதாக இருக்கவேண்டும். (2) குடியேற்றநாட்டு மந்திரியால் நியமிக்கப்படவிருக்கும் கமிஷனின் வேலை மந்திரிமாரின் நகல்திட்டம் குறித்த பிரகடனத்துக்குள் கட்டுப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பரிசோதனை செய்வதாகும். (3) அதன் பின்னர் மந்திரிமாரின் நகல்திட்டம் முக்காலவாசிப்பேரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கசபையின்முன் சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிபந்தனைகளை மீறியிருப்பது 1943ம் வருடத்திய பிரகடனத்திற் கூறிய வாக்குறுதிப்படி நடக்காத தவறாகுமென்று மந்திரிமார் கூறுகின்றனர். கமிஷனின் அதிகாரம் சம்பந்தமான புதிய நிபந்தனை மந்திரிமாரின் நகல் திட்டத்தை அரசாங்கசபை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமையைப் பறிமுதல் செய்துவிடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சிறுபான்மை வகுப்பினர் உட்பட்ட பலவேறு நலன்களுக்கும் திருப்திகரமானதாக இருக்கவேண்டுமென்பதற்காகவே அரசியல் திட்டம் அரசாங்கசபை அங்கத்தவர்களில் முக்காலவாசிப் பேரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டதென்றும் மந்திரிமார் கூறுகின்றனர்.

## ஜெர்மன் சமாதான நிபந்தனைகள்

### லிஸ்பன் வட்டாரங்களில் உலாவும் வதந்தி

லிஸ்டன் யூலை 6—

சமீபத்தில் நிராகரிக்கப்பட்ட ஜெர்மன் சமாதான நிபந்தனைகளைப்பற்றி இந்த வட்டாரத்திற்குச் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றைக் கவனிக்குமிடத்து ஹிட்லரும் இப்போதைய ஆதிக்கப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுவதும் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்பட்டிருந்ததென்று நம்ப இடமேற்படுகிறது. மற்ற நிபந்தனைகள் பறக்கும் குண்டு வீச்சை உடனே நிறுத்திக்கொள்வது.

1939-ம் ஆண்டில் ஜெர்மன் தேசத்தின் விஸ்தீரணம் எவ்வளவு இருந்ததோ அந்த எல்லைக்கு இப்போதும் ஜெர்மனி படிப்படியாகப் பின்னடைந்துவிடுவது. அதாவது 1939ம் ஆண்டுக்குப் பின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை விட்டுவிடுவது.

யுத்தத்திற்குமுன் போலந்து எந்த நிலைமையில் இருந்ததோ அதே அந்தஸ்தில் அதை வைப்பது.

ஹங்கேரி ரூமேனியா முதலிய நாடுகளின் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமிப்பதில்லை என்று பரஸ்பர உத்தரவாதம் அளிப்பது முதலியனவாகும்.

## அனுராதபுரத்தில் இரட்டைக் கொலை

### ஒருவர் உடனும் மற்றவர் ஆஸ்பத்திரியிலும் மரணம்

அனுராதபுரம் யூலை 8

வேலுப்பிள்ளை என்பவர் சந்தனம், உக்குபண்டா என்ற இருவரைக் கொலை செய்ததாகச் சொல்லப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றார். நேற்று முன்தினம் காலை வேலுப்பிள்ளை யாழ்ப்பாணம் சந்தியிற் கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது. சந்தனம் சம்பவம் நடந்த இடத்திலும் உக்குபண்டா பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்ட பின்பும் மரணமடைந்தார்கள்.

பண்டாவுக்கும் வேலுப்பிள்ளைக்கு மிடையில் ஏதோ நெல்வயல் பற்றிய தகராறு ஏற்பட்டதென்றும், அதன் காரணமாகப் பண்டாவைக் குத்த எத்தனித்ததாகவும் சந்தனம் இதில் தலையிட்டுக் குத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

நீதிபதி மிஸ்டர். எல். குயிலடின பெர்ணுண்டோ விசாரணையொன்று நடத்தினர்.

## இந்தியா உணவுப் பொருள் நிலைமை

### திருப்திகரமாக இருக்கிறது என்று டில்லி அபிப்பிராயம்

புதுடில்லி ஜூலை 5—

இந்தியாவின் உணவு நிலைமை பற்றி மூடத்தனமாகச் சர்வானுகூல நம்பிக்கை கொள்வதோ அல்லது கெடுதியாகவே முடியுமென்று திகிலடைவதோ அனாவசியமென்று அரசாங்க வட்டாரங்களில் அபிப்பிராயம் இருந்து வருகிறது. பல மாகாண அரசாங்கங்களை நடக்குக் கொண்டுவந்த உணவுப் பங்கீடு விலைக்கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் திருப்திகரமாகவே நடந்து வருகின்றனவாம். போதிய தானியங்கள் இறக்குமதியானாலும் தேசத்தில் சேகரிப்புத் திட்டம் நன்றாக நடைக்கு வந்தாலும் வருகிற வருஷம் கஷ்டமிருக்காதென்பது அதிகாரிகளின் நம்பிக்கை.

ஆனால் பெரும் முயற்சிகள் அவசியமென்று அதே சமயத்தில் வற்புறுத்தப்படுகிறது. செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்கு முன்பு 4 லக்ஷம் தொன் கோதுமையை அனுப்புவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதிமொழி கொடுத்திருக்கிறது. ஆகஸ்டிலும் நவம்பரிலும் திரும்பவும் நிலைமையைக் கவனிப்பதாகவும் பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்களித்திருக்கிறது. ஆகஸ்டில் மேற்கொண்டு 3 லக்ஷம் தொனனும் நவம்பரிலும் மேற்கொண்டு 3 லக்ஷம் தொனனும் அனுப்பப்படுமானால் எல்லாம் நன்றாக முடிந்துவிடும்.

மலையாளக் கடலோரப் பிரதேசம் தவிரச் சென்னைமாகாணத்தின் நிலைமை நன்றாகவே இருக்கிறது. சென்றவருஷம் மிகக் கஷ்டத்திற்காளான திருவாங்கூரிலும் கொச்சியிலும் தற்போது நிலைமை செம்மையாகவிருக்கிறது.

சங்கிரகமாகக் கூறுமிடத்து இந்தியாவின் நிலைமை தற்போது திருப்திகரமாகவிருக்கிறதென்றும் ஆனால் நிலைமை மோசமாகாதபடி செய்ய உஷாராகவிருக்க வேண்டுவதும் அதிக உணவு தானியங்களை இறக்குமதி செய்ய வேண்டுவதும் அவசியமென்றும் அரசாங்க வட்டாரத்தில் அபிப்பிராயம் இருக்கிறது.

#### கொம்மன்ஸில் கேள்வி பதில்கள்

லண்டன் யூலை 6

இந்தியாவில் பஞ்சம் மீண்டும் எழக்கூடும் என்று செல்வாக்கு வாய்ந்த 27 இந்தியர்கள் பகிரங்கமாய் எச்சரிக்கை செய்தது அமெரிக்குத் தெரியுமா? இது மீண்டும் சேரிடாவண்ணம் தடுப்பதற்கு அரசாங்கத்தார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளார்களா? என்று ரெஜினல்ட் சோரென்ஸன் கொம்மன்ஸ் சபையில் கேள்விகேட்டார்.

அமெரி:—ஏப்ரல் 6-ந் தேதி நான்சொன்ன பதிலிற் குறிப்பிட்டுள்ள "நடவடிக்கைகளை மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் தீவிரமாகப் பின்பற்றி வருகின்றன. இந்தியாவுக்கு உணவுத் தானியங்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவருவதுபற்றி இந்திய அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையும் கவனிக்கத் தக்கது. சாத்தியமான வகையிலெல்லாம் இந்தியாவிற்கு உதவிசெய்ய அரசாங்கம் உறுதிகொண்டுள்ளது என்பதற்கு அது அத்தாட்சியாகும்.

ஆகத் 27 இந்தியப் பிரமுகர்களும் ஏதாவது புது விஷயம் அல்லது யோசனை தெரியப்படுத்தியுள்ளார்களா என்று, சோரென்ஸன் கேட்டார்.

## தபால்மூலம் ஜவுளியை அனுப்புவதற்குத் தடை

### இந்திய அரசாங்கத்தின் புது உத்தரவு

### 'ரெடிமேட்' ஆடைகளுக்கு விதிவிலக்கு

புதுடில்லி யூலை 5—

பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கோ அல்லது பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியிலுள்ள ஒரு இடத்திற்கோ யாரும் ஜவுளியைத் தபால் மூலம் அனுப்பக் கூடாதென்றும் இந்திய அரசாங்கத்தார் புது உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். இந்த உத்தரவு பருத்தி நூலையும் கட்டுப்படுத்துகிறது.

இந்த உத்தரவிற் குறிப்பிட்டுள்ளபடி பருத்தி ஜவுளி என்றால், சேலைகள், வேஷ்டிகள் முதலியனவாகும். ஆனால், 'ரெடிமேட்' ஆடைகளுக்கு இந்த உத்தரவிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

தபால் மூலம் பார்சல் அனுப்பும் உரிமை துஷ்பிரயோகஞ் செய்யப்படுவதைத் தவிர்க்கவும், ஜவுளிநூற் கட்டுப்பாடு விதிகளைச் சரியானபடி நடைக்குக் கொண்டுவரவும்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

## மேலும் சிறந்த பாடசாலைகள்

### கல்வித் திட்டம்பற்றி வித்தியா கர்த்தர்

விசேஷ கல்வி நிர்வாகசபையின் எண்ணங்கள் நிறைவேறுமானால் நாட்டிற் சிறந்த ஆங்கில பாடசாலைகளும் சுயபாஷா பாடசாலைகளும் ஏற்படுமென்றும் வித்தியாகர்த்தர் மிஸ்றர். எச். எஸ். பெறேரா சென்ற ஞாயிற்றுக்கிழமை நகரமண்டபத்தில் நடைபெற்ற வெஸ்லிக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

கல்லூரியின் தலைவர் சங்கை. டபிள்யூ. ஏ. ஹோல்டன் தமது அறிக்கையில் விசேஷ நிர்வாகசபையின் கல்வி அறிக்கையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

## நீர்கொழும்பிற் பிங்கான் தொழிற்சாலை

இம்மாதம் 15ந் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அரசாங்க சபை முதலவரும் அங்கத்தவருமான கௌரவ மிஸ்டர். டி. எஸ். சேனநாயகா நீர்கொழும்பில் அரசாங்க மட்கல ஆலையைத் திறந்து வைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹ
ஆனிமீ ௩0௨ வியாழக்கிழமை

## ஜர்மனியில் உள்நாட்டுக் கலகம் உண்டாகுமோ?

இரண்டாம் யுத்த முனையில் யுத்தம் நடக்கத் தொடங்கிய பின்னர் இக்கொடிய யுத்தம் இந்த 44-ம் ஆண்டிலேயே முடிந்துவிடுமென்று பலர் அபிப்பிராயப்படலாயினர். இன்னும் ஒருவருட காலத்திலே இந்தப் பாரதப்போர் இறுதியெய்துமெனச் சிலர் கூறுகின்றார்கள். இப்படி விரைவிற் சமர் முடியுமென அந்தப் பலரும் இந்தச் சிலரும் எண்ணுவதற்குக் காரணம், ஐக்கிய ராச்சியத்தினர் இப்பொழுது ஜர்மனியருக்கு மாறாகச் செய்துவருங் கொடுஞ் சமரில் நிர்வாகத்து நிற்க ஆற்றாது ஜர்மனியிலே ஹிட்லருக்கு விரோதமாக உள்நாட்டுக் கலகமுண்டாகக்கூடுமென்பதே. ஆனால், இந்தக் கொள்கையை யுத்த அநுபவம் பெரிதும் படைத்தவராகிய சேனாபதி எயிஸன்ஹோவர் ஏற்றுக்கொள்ளவில்லையென்பது சில தினங்கட்கு முன் அவர் வெளியிட்ட கூற்றால் அறியக்கிடக்கின்றது. அச் சேனாபதி பின்வருமாறு கூறியுள்ளார்:—

"புதிய யுத்தமுறை முழுவதும் கைக்கொள்ளப்பட்டு" அப்படியே யுத்தம் நடக்கும் ஜர்மனிபோன்ற நாட்டிலே உட்கலகம் மூளுமென நாம் நிச்சயமாகக் காத்திருக்கவொண்ணாது; அயிரோப்பாக்கண்டத்தில் தொடங்கிய யுத்தத்திலே ஐக்கிய ராச்சியத்தினர் இடையறாத கோரமான யுத்தத்தைப் பகைவருக்கு மாறாகப் புரிவதற்கு எந்த நேரமும் ஆயத்தமாகவேயிருக்கவேண்டும்; உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் அதிகம் வருமெனக் காத்திருக்க வேண்டும்; பகைவரிடமிருந்து இப்பொழுது கைப்பற்றிய ஒவ்வொருஅடி நிலத்தையும் பறிகொடாமற் பாதுகாத்தற்கு ஐக்கிய ராச்சியப்படையினர் கடுஞ்சமர் புரிந்தே தீரவேண்டும்......"

இந்த உலக யுத்தம் கூடிய சீக்கிரத்தில் முடிவெய்திச் சமாதானம் வரவேண்டுமென்பது தான் சமாதானத்தை விரும்பும் மக்களனைவருங் கொண்ட பேராசையாகும். ஆனால் நாம் விரும்புகிறபடியெல்லாம் நடக்குமோ என்பது சந்தேகம். யுத்தத்தில் அநுபவம் படைத்த குறித்த சேனாபதி சொல்வதில் உண்மையுண்டென்றே நாம் மதித்தல் வேண்டும். இற்றைக்கு 26 வருடங்கட்குமுன் அதாவது 1918-ம் ஆண்டில ஜர்மனியர் நின்ற நிலை வேறு, இந்த 44-ம் ஆண்டில அவர்கள் நிற்கும நிலை வேறெனலாம். 18-ம் ஆண்டில ஜர்மனியர் உணவு உணவின்றி யுத்தஞ்செய்யப் போதிய படையின்றிப் பஞ்சப்பட்ட நிலையில் நின்றார்கள். ஆனால், இப்பொழுது உணவு விஷயத்திலேனும் படை விஷயத்திலேனும் பகைவர் பஞ்சப்படத் தொடங்கியதாகப் புலப்படவில்லை; உள்ளபடையோடு இன்னமும் இரகசியப் படையை வைத்திருப்பதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பிருத்தானிய அமெரிக்க ஆகாயப்படை பர்லின் முதலிய ருஷிய பட்டினங்களில் இடையறாது விளைக்கும் சேதத்தினால் அந்தப் பொல்லாத ஜர்மனியர் தம யுத்தவூக்கங் குன்றி நிலைகுலைந்து கலக்கமுற்று ஹிட்லரை வெறுத்து அவருக்கு மாறாகக் கலகம் விளைப்பரோ என்றால் அப்படியும் இதுவரையிற் காணவில்லை. ஆனதால பிரான்ஸில் நேர்ந்ததுமைபோல், இத்தாலியில் விளைந்ததுமைபோல, ஜர்மனியில ஆப்போதைக்கு ஏதும உட்கலகமுண்டாகுமென எதிர் பார்த்திருப்பதும் பிரயோசனமில்லை யெனலாம். மேலும், சேனாதிபதி எயிஸன் ஹோவர சொல்லுகிறபடி ஐக்கிய ராச்சியத்தினர் இன்னும் ஊக்கத்தோடு சமர் புரிந்து பகைவரை ஜெயித்து உலக சமாதானத்தை ஆக்குவதே முறை.

## விசேஷ விஞ்ஞாபனம்

இற்றைத்தேதி இந்துசாதனத்தின் அநுபந்தமாகிய 28-ம் இலக்க ஆங்கில இந்துசாதனப் பிரதி தவிர்த்துக் கொள்ளமுடியாத சில சந்தர்ப்பங் காரணமாக வெளிவராதொழிந்ததென்பதை எங்கள் பத்திரிகையபிமானிகளனைவருக்குந் தெரிவிக்கின்றோம்.

மனேஜர்.

## தேவி உற்சவங்கள்

நல்லூர்ச் சட்டநாதசுவாமி கோவில், திருநெல்வேலிச்சிவன்கோவில் ஆவரங்காற் சிவன்கோவில் புலோலிப் பசுபதீசுரர்கோவில், வல்லைச் சிவன்கோவில், இராமேசுரம் என்னும் தலங்களில் வருகிற சனிக்கிழமை (15-7-44) கொடியேறித் தேவிஉற்சவங்கள் நடைபெறும். ஆடிமாசம் 8௨ ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாளாகிய பூரநட்சத்திரத் தினத்தன்று தீர்த்தமும் முறையே நடைபெறும்.

## மாமி உடைத்தால் மண்குடம்

மருகியுடைத்தால் பொன் குடமா?

இந்திய தலைவர்கள் சிறையிலிருப்பதையிட்டு ஒரு பிருத்தானிய போர்வீரர் பின்வருமாறு ஆசங்கை நிகழ்த்துகின்றார்:-

"இந்தியதலைவர்களை இன்னமுஞ் சிறையில வைத்திருத்தல நீதியுமல்ல, ஆசினரின் விவேகத்தைக் காட்டுவதுமல்ல; மகாத்மாகாந்தி இந்தியாவுள ஒரு சிறந்த தலைவர்; தம நயங் கருதாது பிறர் நயங் கருதும் பெருந்தகையார்; நீய்மையில்லாவனைனுந் தலைவரைச் சிறையிலிட்டதற்காக ஹிட்லரைக் குறைகூறும எங்கள் பிருத்தானிய அரசினர் இந்திய தலைவர்களைத் தாம் சிறையிடலாமா? தாம் செய்ததை சரியென்று அரசினர் சமாதானஞ் சொல்லக்கூடும்; ஆனால இதுசரியென்று என்னால் [illegible] யாது."

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—10)

### "தீயாரோ டிணங்குவதுந் தீது"

அந்தப் பெண்கள் கடற்கரையை விட்டகன்று ஒரு மணிநேரம் வரையிற் சென்ற பின்தான் பாலசிங்கனுக்கு மதுபானவெறி யொருவாறு முறிந்தது; அவன் மயக்கம் நீங்கியவுடன் தன் கூட்டாளிகளைப் பார்த்து "விசுவநாதா! வீராசாமி! நான் எங்கே யிருக்கிறேன்? எனக்கு ஒன்றுந் தெரியவில்லையே" என்று கேட்க; "நீ பூலோகத்திலே தான் இருக்கிறாய்; இன்னுஞ் சற்றுவேளை போனாற்றான் உனக்கு ஏதும் தெரியவரும்; இனிமேல், உன்னுடைய தொடர்பு ஒரு நிமிஷமேனும் வேண்டாம்; நீ இன்று செய்த செயல்களினால் எங்கள் மரியாதை கெட்டுப்போய் விட்டது; தீயாரோடு இணங்கி யிருப்பதுவுந் தீது" என்ற உண்மை இன்றைக்குத்தான் எனக்குப் பூரணமாய்ப் புலப்பட்டது" என்று விசுவநாதன் கடிந்து சொன்னான். பாலசிங்கன் ஏதும் பதில் வார்த்தை சொன்னானல்லன்; அப்பொழுது வீராசாமி விசுவநாதனைப் பார்த்து "விசுவநாதா, நான் படியாத மூடன்; நீங்கள் இரண்டுபேரும் படித்த மூடர்கள்; சொல்லுகிறேனென்று கோபிக்காதே, எங்கள் மரியாதை கெட்டுப்போகுமென்று சற்று முந்திச் சொன்னாயே; எங்களுக்கு மரியாதை ஏதும் இருந்தாலல்லவா கெடும்" என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டுப் பாலசிங்கனைப் பார்த்து "ஏனடா, பாலா, இன்னமும்வெறி முறியவில்லையா? இந்தஇடத்தைவிட்டுப்போக உனக்கு இஷ்டமில்லையா? எழுந்து "வாடா; போவோம்" என்று அதட்டிச் சொன்னான். "எடே, வீரா, எனக்கு வெறி முற்றுமே முறிந்துவிட்டதெடா' ஆனால், தலை உயர்த்தி எழும்ப முடியவில்லை; பூமியும் ஆகாயமும் ஒன்றாய்ச் சுற்றுவது போலிருக்கிறதடா" என்று பாலசிங்கன் சொல்ல வீராசாமி பெருஞ் சிரிப்புச் சிரித்து, "என்னெடா, உன் பேச்சைக் கேட்க, எனக்குப் பைத்தியம மாறிவிட்டதடி உலக்கை கொண்டு வா தலைப்பாகை கட்ட என்று தன் பெண்டாட்டிக்குச் சொன்ன விசானுடைய ஞாபகம வருகிறது. நீ இப்போது எழுந்து வராவிட்டால், பாலசிங்கனும நீயுமாக இங்கேதானே இருங்கள்; நான் ஆவசியகம் போகவேணும்" என்று சொல்லிக்கொண்டு வீராசாமி போதற்கெழுதலும், விசுவநாதன் அவனைத் தடுத்து "வீரா, நானும் உன்னுடன வருகிறேன்; ஆனால், இவனை இந்த நிலைமையில் விட்டுவிட்டுப் போவது சரியல்ல" என்று சொல்லுதலும், வீராசாமி பாலசிங்கனைப் போய்த் தூக்கிவிட அவன தள்ளாடி நடந்து அவர்களுடன் போய்த் தன் வீடு சார்ந்தான்; மற்றை இருவரும தத்தம் வீட்டையடைந்தனர்.

### "கெடுகுடி சொற்கேளாது"

"என்ன பாருங்கள்; நீங்கள் எங்கள் பிள்ளை விஷயமாக ஒன்றும் யோசிக்காம லிருக்கிறீர்கள்; பருவத்தே பயிர்செய் யென்றவிதமாக அந்த அந்தக் காலத்திலே பிள்ளைகளுக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாம லிருந்தால், பிறகு நாங்கள் துக்கப்பட வேண்டி வருமல்லவோ; எங்கள் மகளவயசுப்பிள்ளைகள், எங்கள் மகளோடு படித்த பிள்ளைகள், மகளுக்கு இளையவர்கள் [illegible] ஒவ்வொருவருக்கு [illegible], அவர்கள் கலியாண நிகழ்ச்சியும் பழையதாய்ப் போய்விட, நாங்கள் இரண்டு பேரும் ஒரேயொரு பிள்ளையை வைத்துக்கொண்டு பாராமுகமா யிருக்கலாகுமோ; உங்கள் மருமகனுக்குச் செய்து வைப்பதென்றாற் செய்து வைக்கவேண்டும்; அது சந்திக்காவிட்டால் வேறெங்கேனும் பேசிப் பொழுங்குபண்ண வேண்டும்; மனுஷன் காயம் நிச்சயமல்ல என்பது உங்களுக்குத் தெரியாததல்ல; நீங்கள் என்னவோ யோசியாமல் திரிகிறீர்கள்; எனக்கு இராப் பகலாக இதுவே சிந்தனையாக விருக்கிறது; ......" என்று இடையீடின்றிக் கரைந்தாள் பெரியநாயகம்; தம்மனைவி சொல்லி முடிக்குமட்டும் மௌனத்தோடு கேட்டுக்கொண்டிருந்த அருணாசலம்பிள்ளை பெருமூச்சு விட்டு, "அது சரி, இதற்கு இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்; பெண்ணுக்கு மாப்பிள்ளை யென்றால், சீலை அணி போல, இல்லையேல நகைநட்டைப் போல உடனே பணத்தைக் கொண்டு போய்க் கடையிற் கொடுத்து விலைதீர்த்து வாங்கக் கூடிய பொருளா? இல்லையேல் நாம நினைத்தபடி செய்து வைக்கத்தக்க காரியமா? தாரமும் குருவும் தலைவிதி யென்று சொல்வார்களே; எல்லாம் வந்து சந்திக்கவல்லவோ வேண்டும். நமது மருமகன் நல்ல விவேகி, படித்தவன்; நல்லாய் வருகிறான்; புறத்தியிற் போகாமல் அவனையே எங்கள் பிள்ளைக்குக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்று மனக்கோட்டை கட்டியிருந்தேன்; ஆனால், அவன் விஷயம் நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்ததாய் முடிந்துவிட்டது; அவனைத் திருத்தலாம், அவன் திருந்துவானென்றெண்ணி ஆகவேண்டிய முயற்சிகளைச் செய்தேன்; கெடுகுடி சொற்கேளாது என்ற நிலையில் அவனிற்கிறான்; அவனுடைய யோக்கியதையை அன்று படக்காட்சியில் நீதானே நேரிற் கண்டுகொண்டாய்; அவனுடைய நடத்தையைப்பற்றி எங்கள் பிள்ளையும் அறிந்தாளோ, அறியவில்லையோ, எனக்குத் தெரியாது; ஆனால அவளிடத்தில அவளுக்கு எள்ளளவும் பற்றில்லையென்றறியக் கிடக்கின்றது; அந்தக் குடிகாறனை இனி ஆருக்குத்தான் தேவை; வீணே என்னைக் குறை சொல்லாதே, எங்கள் மகளென்றாலோ அவனைக் கல்யாணஞ் செய்யவும் உடன்படுகிறாளில்லை, வேறு ஒரு மாப்பிள்ளையைப் பேசி யொழுங்கு பண்ணலாமென்றால் அதற்கும உடன்படாளாமே; இதற் கென்ன செய்வது; இன்னுமொரு முறை பிள்ளையின நோக்கத்தை நீதான் உசாவியறிந்து வந்து சொல்லு; அதன்பின் ஆகவேண்டிய முயற்சியை நான் பார்க்கிறேன்" என்று சிந்தனையோடு சொன்னார்; "அப்படியே கேட்டுச் சொல்லுகிறேன்" என்றாள் மனைவி. தன் மகள் ஆறுதலாயிருக்குஞ் சமயம் பார்த்து, தாய் விஷயம முழுவதையும் மகளுக்குச் சொல்லி, பிள்ளையையிட்டுத் தகப்பனார் கவலைப்படுவதையும் தெரிவித்தாள்; "அம்மா உங்களுக்குக் கோடி நமஸ்காரம்; என்னை மருமகனுக்குக் காதாகள்; இந்த விஷயமாக என எண்ணத்தை நான வெளியிடுவதற்கு எனக்கு ஆறுமாசத் தவணை தரும்படி எங்கள அருமையான தகப்பனாரிடங் கேளுங்கள்; இதற்காக என்மேற் குறைநினைக்க வேண்டாமென்றும கோபிக்க வேண்டாமென்றும ஐயாவிடஞ் சொல்லுங்கள்" என்று விசாலாட்சி தாயை

தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபத்தி

[வித்துவான். திரு. சா. பெரியசாமிப் பிள்ளை அவர்கள், பரங்கிப் பேட்டை]

(முற்றொடர்)

முதல்வன் குருவடிவங் கொண்டு உபதேசிக்கக் கேட்டு, கேட்ட பொருளைச் சிந்திக்கின்ற பொழுது பிறவித்துன்பமாகிய வெப்பத்திற்குக் குளிர்ந்தநிழலாய் விளங்கித் தோன்றுஞ்சிவஞானத்தினால் தன்னறிவின்கண் ஆராய்ந்து நிற்கும். தெளிதலின்கண், சிவஞானத்தினால் ஆராய்ந்தறியப்பட்ட முதல்வனோடு உயிர் உடனாகி நின்ற அறிந்தாலும் தானென்று வேறாகக் காணப்படாமல் அம்முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நின்று அம்முதல்வனருளாலல்லது ஒன்றையும் செய்யாது நிற்கும். நிட்டையின்கண், அங்ஙனம் முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நின்று முதல்வனருளாலல்லது ஒன்றையும் செய்யாது நிற்கும் உயிர், முதல்வன் அத்துவிதமாய் நின்று பெருங் கருணையால் அறிவித்து அறிந்துவரும் உதவியை நோக்கும். அங்ஙனம் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அக்கருணையின்கண் இச்சை மேலும்மேலும் வளர்ந்து நிற்கும். அப்பொழுது அந்த இச்சை வடிவமாகத் தோன்றும் பேரானந்தத்தை யநுபவிக்கும். இது சிவஞானபோதத்து 9, 10, 11 ஆம் சூத்திரங்களானும்,

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதிற்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்.

என்னும் திருவாசகத்தாலும் நன்கு தெளியப்படும்.

இத் திருவாசகத்துள் "காட்டாதனவெல்லாம் காட்டி" என்பது இதுகாறும் உபதேசிக்கப் பெறாத பொருளை உபதேசித்து என்னும் பொருளைத் தந்து கேட்டலையும், "சிவங்காட்டி" என்பது சிவஞானம் விளங்கித் தோன்றியென்னும் பொருளைத் தந்து சிந்தித்தலையும், "தாளதாமரைகாட்டி" என்பது அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாது நிற்றலாகிய இறைபணி நிற்றலையுணர்த்தித் தெளிதலையும், "தன் கருணைத் தேன்காட்டி" என்பது முதல்வன் அறிவித்து அறிந்து உபகரிக்கும் பெருங்கருணை நோக்குந்தோறும் நோக்குந்தோறும் பெருக வளரும் இச்சை வடிவமாகத் தோன்றும் பேரானந்தத்தை யநுபவித்து என்னும் பொருளைத் தந்து நிட்டையையும் உணர்த்துகின்றன. சிவம் என்பது சிவஞானமென்னும் பொருளைத் தந்து நின்றது.

கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டை கூடுதலாகிய இந்நான்கனுக்கும் முதல்வனது உபகாரம் இன்றியமையாது வேண்டப்படுதலின், நான்கிடத்தினும் காட்டி என்று பிறவினைவாய்பாட்டால் ஆசாரியர் உபதேசித்தருளினர்,

முதல்வனது கருணையை நோக்கிப் பேரின்புறுதல்,

திருவுயர் கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளமுருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கின்றேன்
கண்டாய் வருகவென் றருள்புரியாயே.

என்னும் திருவாசகத்தால் நன்கு விளங்கும்.

நீர்க்கண் உளதாகிய நிழல் நீரோடு விரவி நிற்றலால் நீர்போல விளங்கித் தோன்றாது நிற்கின்றது. அதுபோல, முதல்வன் உயிரின்கண் விரவி விளங்கித் தோன்றாமல் நிற்பன். அங்ஙனம் விளங்கித் தோன்றாது நிற்கும் முதல்வனை, அம்முதல்வனே குருவடிவங் கொண்டு வந்து உணர்த்தினால் உணரலாம். உணர்த்தாவிடின் உணரமுடியாது. இது,

இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால்
நல்லா யுளவாமா னீர்நிழல்போ— லில்லா
அருவாகி நின்றானை யாரறிவார் தானே
உருவாகித் தோன்றானே லுற்று.

என்னும் சிவஞான போதத்தானும்,

காவலாதபே ரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவ னாருளன்றியக் கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கடப்பது புணையினு லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்.

என்னும் திருவிளையாடற் புராணத்தாலும் நன்குணரப்படும்.

இங்ஙனம் தனது உண்மையை அறியாமல் குருடாய்க்கிடந்த உயிர்க்குப் பலவகையாலும் அவ்வுயிரினது உண்மையை யறிவித்து எளிய அவ்வுயிரை அரிய சிவமாந் தன்மை அடையுமாறு செய்த குருவினது பெரியதோருதவியை மறவாமல் அக்குருவினை வழிபடுதல் வேண்டும். வழிபடாவிடின் பெரியதோர் பிழையாகும். இது,

'தன்னை யறிவித்துத் தான்றானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது'

என்னும் சிவஞான போதத்தாலும்,

இரவு பகல்நிழல்போ லிட்டபணி செய்து
குரவர்புகழ் வாயாரக் கூறித் — திருமுன்
விழுந்துவிழி நீர்பொழிப மெய்விதிர்த்து நின்று
தொழுந் தவத்தோர் காணுஞ் சுகர்.

என்னும் துகளறு போதத்தாலும் தெளியப்படும்.

பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் அடையுமாறு செய்த குருவினுடைய திருநாமம் மகாமந்திரமாகும். வேம்பினைத் தின்ற புழு கரும்பினையடைந்து அதனைத் தின்று அதனது சுவையைத் தெரிந்த பொழுதும் பழக்க வாசனையால் வேம்பினையே விரும்பும். அதுபோலப் பாசத்தொடு கலந்தவுயிர் குருவினருளால் ஞானம் விளங்கி அந்தஞானத்தினால் முதல்வனது திருவடிப் பேறாகிய சிவானந்தத்தை யனுபவிக்கும் பொழுதும் பழக்கவாசனையால் பாசத்தையே நோக்கி நிற்கும். அங்ஙனம் நோக்குதலால் மெய்யுணர்வு குறைவுறச் சிவானந்தம் குறைவுபடும். இங்ஙனம் சிவானந்தம் குறைவுபடுதற்குக் காரணமாயுள்ளது வாசனாமலமாகும். இவ்வாசனாமலம் நீங்குதற்பொருட்டுக் குருவினது திருநாமமாகிய மகாமந்திரத்தினை அன்போடும் இடையறாது உச்சரித்தல் வேண்டும். இது "தெளிவு குருவின் திருநாமம் செப்பல்" என்னும் திருமந்திரத்தாலும், பரமாசாரியராகிய திருஞானசம்பந்தப் பெருமானது திருநாமத்தை மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டியனது செவியில் கூறியருளியபொழுது அந்த நாமமாகிய மந்திரம் நின்றசீர் பாண்டியனை நோயினுள் அடங்கிய சோர்வு நீங்கப் பேசத் தொடங்கினான் என்று கூறியருளுதலானும் நன்கு தெளியப்படும். திருஞானசம்பந்தப் பெருமானது திருநாமம் மந்திரமாயமைந்தது.

# ஆகமங்கள்

திருமயிலை, திருவாளர். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

ஆகமங்கள் வேதங்களுக்குத் திறவுகோல் போன்றவையென்று முன்னரே கூறியுள்ளேன். ஆகமங்கள் வேதங்களின் உண்மைப் பொருளை விளக்குவதன்றி அவைகளாற் போந்த பயனை அடைவதற்கேற்ற சாதனங்களையும் புகட்டுவதாம். வேதங்கள் உண்மையைப் பொதுப்பட விளக்குவதால் பல சமயத்தவர்களும் அவற்றைத் தமது பிரமாண நூல்களாகக் கொள்ளுகின்றனர். இக்காரணம்பற்றியே அறுவகைச் சமயங்கள் தோன்றலாயின. இச்சமயங்கள் கொள்கைகளில் ஒற்றுமைகொண்டு பேசப்பட்டாலும் வேதங்களைத் தமக்குஆதாரமாகக் கொள்ளுகின்றவேயாம். பகற்சூரியனை ஒவ்வொருவரும் தமக்கே நேரே இருப்பதாக எண்ணுகின்றனர். இதுபோல் வேதங்களை என்று கூறலாம். கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் தங்கள் கோட்பாடுகளோடு வேதங்கள் முரண்படவில்லையென்று கூறுகின்றனர். மறுபிறப்புண்மை வேத உடன்பாடன்று என்று கூறும் கிறிஸ்தவர்கள் வேதங்கள் தங்கள் சமயத்தோடு மாறுபடவில்லையென்று கருதுகின்றனர். ஆனால், யாம் வேதங்களை ஆகமங்களின் உதவிகொண்டு ஆராய்ந்து பார்த்தால் மறுபிறப்புண்மை ஆகமங்களின் உதவிகொண்டு ஆராய்ந்து பார்த்தால் மறுபிறப்புண்மை வேதங்களில் கூறப்பட்டிருப்பது புலப்படும். பௌத்தமதம் வேதசம்பந்தப்பட்ட மீமாஞ்சை மதத்தோடு ஒற்றுமையுள்ளது. வேதங்களை ஆகம அறிவுகொண்டு ஆராய்ந்தால் மீமாஞ்சகர் கூறும் வேதப்பிரமாணங்களின் உண்மைப் பொருள் விளங்கும். சாங்கிய சூத்திரங்களின் உரைகாரர்களில் ஒருவராகிய விஞ்ஞான பிக்ஷு என்பவர் அறுவகைச் சமயங்களும் முத்தியங்கரைக்குச் சேர்க்கும் படித்துறை போன்றவையென்றும் எல்லாம் ஒன்றன் பின்னொன்றென்றும் கூறினார். ஆகமங்களால் அவர் கூற்றைத் தெளிவாக அறியலாம். ஆகம உண்மைகள் வேதங்களில் புதைக்கப்பட்டுள. ஆகமங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதுபோல உண்மைக் கருத்துக்கள் வேதங்களிற் கூறப்படவில்லை. வேதங்கள் பாரதகண்டத்திலுள்ள எல்லாச் சனங்களுக்கும் உரியவை. சனங்கள் பலதிறப்பட்டிருப்பதால் உண்மையை உள்ளபடி அறிந்து பயன்பெறக்கூடியவர் சிலரேயாகலான் வேதங்கள் பலருக்கு மறைமையாம். சனங்கள் மேற்படிக்கு வந்தால் வேதங்களின் உட்பொருளை ஆகமத்தின் மூலமாக அறியலாம். இவ்வுண்மை புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றது. சனகர் முதலிய மகாரிஷிகள் வேதஉண்மையை அறியக்கூடாமல் பல வருடங்களாகத் திகைத்துக்கொண்டிருந்தபோது சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தி கோலத்தோடு வந்து ஆகமங்களைப் புகன்றதாக ஸ்காந்தமகாபுராணம் கூறும்.

(தொடரும்)

---

மீனவன் செவியி னூடு மெய்புணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்த ரென்னு நாமமந் திரமுஞ் செல்ல
ஆனபோ தயர்வு தன்னை யகன்றிட வமண ராகு
மானமில் லவரைப் பார்த்து மாற்ற மொன் றுரைக்க லுற்றான்.

என்பதனால் நன்கு விளங்கும்.

(வரும்) —ஞானசம்பந்தம்

# ஸ்ரீ சேக்கிழார் பெருமான் பெருமை

(சமரஸம் சுவைப்போன்)

(முற்றொடர்)

7. பாத்வ நிலையைக் கவனித்தால் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான் "யாவர்க்கும் கீழாம் அடியேன்" என்றார். நம்மாழ்வார் "தான் முடிவு காணாதே" என்றார். உயர்வு அற உயர்நலம் உடையவனுபவன் அவன் என்று ஜலஸ்வரூபமாக வர்ணிக்கப்படுகிற திருமால்தான் கீழ்மையென்று மேலிருந்து கீழே போக அக்நிஸ்வரூபமாகிய சிவபெருமான் தான கீழ்மை என்று ஜலஸ்வரூபத்தைக் கீழே போகவிடாமல் ஆவியாக்கித் தன் தலைமேல் கங்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார். இப்படி ஒருவருக்கொருவர் "பரஸ்பர நீசபாவை" என்று நான் தாழ்மை நான் தாழ்மை என்று சம்பந்தரும் அப்பரும் கூடினாற்போல இருக்கிறதன்மையைக்கவனித்தால் அவர்கள் அடியவர்களாகிய நாம் என் பெருமான் உயர்வு என் பெருமான் உயர்வு என்று வீணவாதம் செய்து "எல்லீரும் வீடுபெறல் உலகில்லை" என்றகருத்தின்படி அபசாரப்பட்டு ஆழ்ந்த அஞ்ஞானத்தில் மடிந்து வீழ்கிறோம்.

ஏன் இப்படி சைவம் வைணவம் என்று இரண்டு நூல்கள் ஏற்பட வேண்டுமென்பதற்கு ஆண் பெண் இருவகுப்பு இருப்பதனாலும் இரண்டுங்கலந்தால்தான் அன்பு நெகிழ்ச்சி ஏற்படுமென்றும் அதிதான் மண்ணும் மணமும் என்றும் அந்த மணங்கண்டு வாழ்கிறோமென்றும் சொல்லப்படுகிறது. அப்பர் பெருமான் "ஆலின் கீழ்மேல பாலனுமாய அவற்கோர் பரமாய மூர்த்தியவனும் நமக்கோர் சாணே" என்று திருமாலை நினைக்கிற மூர்த்தி தன் மூர்த்தி என்றும், திருமங்கையாழ்வார் சீலமாதவத்தோர் சிந்தையாளி என்சிந்தையானே என்று சிவபெருமான் சிந்திக்கிமூர்த்தி தன் மூர்த்தி என்றார். நம்மாழ்வார் "சிவனொடு பிரமன் வண்ணத் திருமடந்தை சேர் திருவாகம் எம்மாவியீர்ந்த" என்றார். எலக்டிரிக் விளக்குக்கு அக்கினியிலிருந்து ஒரு காண்டு ஜலத்திலிருந்து ஒரு காண்டு இரண்டும் சேர்ந்தால் வெளிச்சம் தருகிறது என்பர். ஆனால் இரண்டால் பிரகாசமில்லை, பிரமனாகிய உடம்பு இல்லாது சேர்ந்தால் பிரகாசம் உண்டாகிறது. அதுபோல் அருளும் அதனை உடையவனும் வேண்டும். அருளை உடையவன் தான் அனைவிக்கும் முடிந்ததே என்று சொல்லுகிறபடி பேரின்பத்தை நீங்க ஒற்றுமைப்பட வேண்டும்.

"வல்லதோர் வண்ணம் சொன்னால் அது உனக்கு ஆம்வண்ணமே" என்றதுபோல ஸ்ரீ சேக்கிழார் புராணத்தின் பெருமையை அடியேனுக்கு கூறியன அறிந்தமட்டில் தொகுத்து சைவமல்லாமல் வைணவமில்லை வைணவமில்லாமல் சைவமுமில்லை என்றும், பெரியபுராணம் எல்லா மதத்தாருக்கும் சத்தியமென்றும், "சத்தியத்தைச் சொல் தர்மத்தைச் செய்" என்று தான் சொல்லுகிறதென்றும், நாடும் நகரமும் நன்குடன் காணும்படிக்கும் நலனிடை ஊர்தி பண்ணும்படிக்கும் தீமனம் கெடுத்து மருவித் தொழும் மனமே பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக மெய் அடியார்களாக விளங்கி, பரோபகாரத் தன்மையில் வாழ்ந்து வரும்படிக்கும் உபதேசிக்கப்படுகிற சாரத்தை அறிந்துகொண்ட விபரத்தைச் சுருக்கமாய் அடியேன் எழுதலானேன்.

—சித்தாந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம்

[சோம. சரவணபவன்]

குறிஞ்சிக் கிழவனும் குன்றுதொறும் பண்பினனுமாகிய குமாரவேள் தயிரில் செய்யென எழுந்தருளியிருக்கும் சீர்கெழுவிழவும் ஆர்வலரேத்த மேவரு நிலையும் வேலன் தைஇய வெறியயர் களனும் காடும் காவும் கவின்பெறு துருத்தியும் யாறும் குளனும் வேறுபல் வைப்பும் சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் மன்றமும் பொதியும் கந்துடை நிலையும் ஆகிய இவற்றுட்பல தன்பாற் பெருந்துஞ் சிறப்பினையுடையதும், தன்னையறிந்தார்க்கும் ஒரு முறையாவது தரிசித்தார்க்கும் தன் திருப்பெயர் செவிப்பட்ட மாத்திரத்தேனுந் தன்னைச் சிந்தித்த மாத்திரத்தேனும் உடம்பெங்கும் மயிர்சிலிர்க்க ஒருவகை யச்சமும் அன்பும் இன்பமும் ஒருங்கே உதித்தெழச் செய்வதும், தன்னையடைந்த இரும்புநேர் வஞ்சமனப் பாதகரையும் பத்தரை மாற்றுத் தங்கமான பரம பக்தராக்கும் இரசவாதி போன்றதும், அருணகிரிநாதர் முதலாகப் பக்தசிகாமணிகள் பலர் சூட்டின பாமாலை புனைந்ததும் ஆகிய ஓர் புண்ணிய க்ஷேத்திரம் கதிர்காமம்.

கதிர்காமம்! எவ்வளவு திவ்யமான நாமம்! பண்டிதரும் புராணிகரும் பாஷாவிற்பன்னரும் சரித்திரகாரரும் ஆராய்ந்து சொல்லுகிற பலவகைக் கருத்துக்களும் நினைவுக்கு வரமுன்னர் இயல்பாகவே கதிர் என்பது ஒளியையும் காமம் என்பது இச்சையையும் உணர்த்தி நிற்றலின்றேல், தனம்மேல் மோகங் கொண்டுள்ளோருக்கெல்லாம் கதிர்காமம் என்னும் பெயர் அருளொளி பரப்பிப் பரமானந்தம் பயத்தலை உணர்த்திக்கொள்ளுகிறது.

"சாரும் மதம் பொருளேழுமை கிழவர் சாற்றுமுயர்
வாதிகளற்ற பரம சதானந்தவகுவயப்
பூதிகொள் தெய்வத் தலங் கதிர்காமமிப் பூதலத்தி
லேதிலர்க் குற்ற துணையுங் கதிரையிறையவனே"

"முக்கோணவீதி முளைத்த மறைப்பொருள் முன்பினிலை
திக்கோசைபட்ட வாகா வென்னுந் திருத்தொனியால்
வைமக்கார்ப்படியு மலர்ச்சோலை நாவினம் வன்பிறவி
புக்கா றுகந்த பதத்தோங்கு புண்ணியம் பூண்டனவே"

"ஆற்றற்கரிய துயர்பிணி கொண்வராக்கை வெறுத
தேற்றற் கரிய திருச்சந்நிதி முனமீனமறக்
கூற்றுக் கரிய தந்நவுங் கழுத்துங் குறைகக முன்போற்
சாற்றற்கருள் செயுந் தென்கதிர்காமத்துச் சண்முகனே"

"தாயைக்கண்டோடிடும் பிள்ளையைப்போலத் தரித்தலின்றி
நோயைக் கொண்டோடுஞ் சடலம் வருந்த நுவல்வழியில
வாயைக் கொண்டோடிடு மாகா கூறி வழுத்துகின்றோர்
ஆயப்படுதற் கடங்காக் கதிரையறுமுகனே"

"ஆலயப்பாங்கு முருவமுமின்றி யனைவரையுஞ்
சாலவுமாட்டி யவரவருள்ளத் தகுதிகண்டு
கோலமுங் காட்டிக் கதிரையிலோர்பொருள் குஞ்சரத்தின்
மேலிவர்ந்தோங்கிட முக்கோணவீதி வெளாடபடும்"

"குஞ்சரமீது குலவிடுங் கோலத்தைக் கூடுதொண்ட
ரஞ்சலி செய்து மாகாவென்று மருள்நடனந்
தஞ்செயலற்றுச் சரண சரணென்றடி சாருவதே

## முகாந்திரம் பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களுக்கு உபசாரணை

நிகழும் தாரண வருஷம் ஆனி மீ 24ந் திகதி (7-7-44) வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் அளவெட்டி ஆங்கில வித்தியாசாலை முன்றிலில் அமைக்கப்பட்ட அலங்கார மண்டபத்தில் பிரம்மஸ்ரீ தி. சதாசிவஐயரவர்கள் முகாந்திரப்பட்டம் பெற்றமையைப் பாராட்டுவதற்காக ஓர் பகிரங்கக்கூட்டம் திரு. S. நடேசன் B. A. B. L. F. R. E. S., M. S. C. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஐயரவர்களை அளவெட்டி பெருமாக்கடவை விநாயகராலயத்திலிருந்து அளவை அன்பர்கள் ஊர்கோலமாக மேற்படி வித்தியாசாலைக்கு அழைத்து வந்தனர். தலைவருக்கும் ஐயரவர்களுக்கும் மாலையிடப்பட்டதும் தேவாரபாராயணத்தோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. முதலில் அளவெட்டி ஆங்கில வித்தியாசாலை மாணவிகளால் ஓர் வந்தனோபசாரப்பா இன்னிசையுடன் பாடப்பட்டது. பின்னர்த்தலைவரவர்கள் ஐயரவர்களின் கல்வியறிவு ஒழுக்க நலன்களையும் அவர்கள் கல்வியுலகிற்குப் புரிந்து வரும் அரிய தொண்டுகளைப்பற்றிப் புகழ்ந்து பேசியதும் திரு. சி. விஞசித்தம்பியவர்களால் ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

அளவெட்டியிலுள்ள அருணாசலம் சதானந்த ஆங்கிலபாடசாலைகளின் சிறுவர்களால் தொடர்ச்சியாக ஒரு சிறந்த இசைவிருந்து அளிக்கப்பட்டதும் ஐயரவர்களின் கல்வியறிவொழுக்கங்களையுந் தொண்டுகளையுமே வற்புறுத்தி பிரம்மஸ்ரீ சண்முகானந்த சர்மா, பிரம்மஸ்ரீ. சு. கிருஷ்ணசுவாமி ஐயர், திரு. மனுப்புலியார் கந்தையாபிள்ளை என்னும் பெரியார்கள் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள்.

ஐயரவர்களின் அரிய பதிலுக்குப் பின் தலைவர் முடிவுரை கூறப்பட்டதும் காரியதரிசி திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களால் ஐயரவர்கட்கும் பேச்சாளர்கட்கும் சபையோர்க்குந் நன்றி கூறப்பட்டது.

கூட்டம் இரவு 10-30 மணியளவில் தேவார பாராயணத்தோடு பூர்த்தியாயிற்று.

—கடித

---

மஞ்சுறை தென் கதிர்காமத்துச் சந்நிதி மாண்புகளே"

[இப்பாக்கள் கல்வியறிவொழுக்கம் பக்தி ஆகியவற்றிற் சிறந்த பண்டிதர் ஸ்ரீமான். செ. வை. செல்லையா அவர்கள் இயற்றின கதிர்காம மாலையிலிருந்து எடுத்தவை.]

"சூரிற்கிரியிற் கதிர்வேலெறிந்தவனேறுண்டர் குழாஞ் சாரிற் கதியன்றி வேறிலைகாண்" எனபர் அருணகிரிநாதர். இப்புண்ணிய ஸ்தலத்திற் கூடுகின்ற பெருந்தொண்டர் குழாத்தினிடையே கலந்து பரமானந்த சுகம்பெற எல்லோருக்கும் கதிரையாண்டவன் திருவருள் புரிவாராக.

"மாணிக்க கிறைகங்கை யடியுணைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வரயூர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவுங்
கரணிற் குமார வேலாவென்று முன்பரைக
காடி புலி யானை சிங்கங்
காவிற் பணிந்தஞ்சியோடவுங் கந்தனை
கண்கண்ட தெய்வமெனவே
ஆணிப்பொன் முத்திமண்டப மேவு கச்சியினு
மடியே யனையாண்டுகொண்ட
முகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த்தெய்வமே
சேணிறப் பூலோக மெச வளர்த்த பணிபிடிகணவ
செங்கீரையாடியருளே
தேவொடு முனிவர்பணி கதிர்காமவேலனே
செங்கீரையாடியருளே

# "பக்தி முதிர்ந்த பாலகனர்"

[ஆசிரியர், திரு. சி. செல்லத்துரை அவர்கள், தெல்லிப்பழை]

(முற்றொடர்

வலிய பாறை கிலத்து மரம் முளைத்தாற்போன்று அன்பை அகத்தேயில்லாத உயிர்வாழ்க்கையுடைய இடையன் பசுக்களை நன்கு மேய்ப்பானோ? அவன் மேய்க்கும் பொழுது அவை நல்லபயன்களை உதவுமா? எங்ஙனம் ஆகும். "தாயிற் சிறந்த தயாவான தத்துவனது" "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடர்" போற் றொளிர விருக்கும் விசாரசருமர் மேய்க்கும் பொழுது அந்நிரைகள் எவ்வாறு பயனளிக்கும் என்பது கூறவும் வேண்டுமா? கன்று பிரியிற் கதறும் பசுக்களெல்லாம் விசாரசருமர் என்னும் மறைக்கன்று பிரியிற் கதறும் பசுக்களாயின. தாய்போன்று அவர் பக்கலிற் சென்று கறவாமலே பாலைச்சொரிவனவாயின. அவருக்கு,

"தம்மை அணைந்த ஆன் முலைப்பால்
தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறுமனத்தில்
திருமஞ்சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மையுடைய வள்ளலார் எய்த
நினைந்து தெளிந்தவன்பால்
மெய்ம்மைச்சிவனுர் பூசனையை விரும்
பும் வேட்கை விரைந்து"....

எழுவதாயிற்று. முன்னைப்பிறவியிற் செய்துகொண்ட அர்ச்சனையின் தொடர்ச்சியானது அண்டியது. சிறுவர் அலைவர்? என செய்வார். எனினும், "வாழும்பிள்ளையை மண்விளையாட்டிற் றெரியும்" என்பது பெரியோர் வாக்கன்றோ? அது போல சிவார்ச்சனையும் விளையாட்டாக உண்டாயிற்று. அன்புபொங்கி வழிந்தது. மண்ணியாற்றங் கரையிலுள்ள மணற்றிடலை யடைந்து ஆங்கு நின்ற ஆத்திமரத்தின்கீழ் சிவலிங்கத்திருமேனியை மணலால் அமைத்தனர். மணலினாலேயே "சிவாலயமுந் துங்கநீடு கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தனர்" ஆத்தியின பூவொடு தளிர்களையும் பறித்துக்கொடு வந்தனர். புதிய குடங்களைக் கொண்டு சென்று பாற்பசுக்களின் முலைகளைத் தீண்டினர். அவை "செழும்பால் குறைவறப் பொழிந்தன" குடத்தில் நிறைந்த பாலை மணலாலயத்துள் வைத்தனர். மலர்களைக்கொண்டு "பண்டைப்பரிவால் அர்ச்சித்துப் பாலின் திருமஞ்சனம் ஆட்டினர்" இறைவனும் விசாரசருமர் முன்னை அன்பின் தொடர்ச்சியினால் முதிர்ந்த பற்றுடன்செய்யும் அருச்சனையை மணல் இலிங்கத் திருமேனியுள் நின்று உவந்தேற்றனன். அன்பே சிவமாகவும் சிவமே அன்பாகவும் அமர்ந்திருக்கும் நிலைமை உணர்ந்த இறைவனின் அன்பாளர் பிறிதொன்றிற் பற்று வைப்பரோ? அத்தகையார்க்கு இறைவனும் அருள் புரியாதிருப்பானோ! மறைச்சிறுவராம் விசாரசருமர் திருமஞ்சனத்திற்கு எவ்வளவு பாலைக் கறந்துகொண்டபோதிலும் பசுக்கள் அந்தணர்மனைகளிற் கறக்கும் பாலிற் குறைவடைந்தில. சிறுபிள்ளை செய்யும் மண்விளையாட்டல்லவா இச்செயல். பதிஞானம் சிறிதுமில்லா அஞ்ஞானிகட்கு இவரது செயல்களெல்லாம் பயனற்ற செயல்களாகவே காணப்பட்டன. மணலிற் பால் சொரிந்து விளையாடலைக்கண்ட ஒருவன் மறையோர்க்கு அறிவித்தனன். கேட்ட மறையோர்,

......"ஆயன் அறியான் என்று அவரற்றன இச்சை வழியே யான மேய்ப்பேன் என்று எம் பசுக்கள் தன்னைக் கொண்டு" வீண் செயும் மகனது செயல்களைக்கூற "எச்சதத்தன்றன்னை அழையும் என்றார்"

ஆங்கு வந்த எச்சதத்தனுக்கு நடைபெற்ற செயல்களனைத்தையும் எடுத்துரைத்தனர் மறையோர். அஞ்சிய எச்சதத்தன், இதனை யான் முன்பு அறியேன். அங்ஙனமாயின், "இறையும் பெருமை அந்தணர்காள் பொறுக்கவேண்டும் நீங்கள்" என்று வேண்டினன். விசாரசருமராம் மணியைப் பெற்ற எச்சதத்தனும் நாகம் நஞ்சை உமிழ நினைந்தது. இராப்பொழுதும் ஒருவாறு கழிந்தது. வழக்கம்போல் மைந்தனும் ஆநிரைகளை மேய்க்கப் புறப்பட்டனர். அவரறியாதே தந்தையும் பின்தொடர்ந்தனன். மண்ணியாற்றங்கரையில் நின்ற குராமரத்திலேறி ஒளித்திருந்து மைந்தர் செயலைக் காண்டற்கு இருந்தனன். சருமரும் முன்போலவே மணலாற் கோயிலும் இலிங்கமும் அமைத்து மலர்களைச் சொரிந்து பாற்குடங்களையும் கொண்டுவந்து வைத்தனர். விளையாட்டாகிய பூசனையும் ஆரம்பமாயது. இறைவன் திருமுடியில் மலர்களைச் சொரிந்தனர். பால் நிறை குடங்களை எடுத்துத் திருமஞ்சனம் ஆட்டினர். முன்னைப்பிறவியிற் செய்த அன்பின் தொடர்ச்சியும், பூசனையும் ஒன்று சேர்ந்தன. இதுவே விசாரசருமனது பக்தியை வெளிப்படுத்த உரிய பொழுதென நினைந்தனர் ஆண்டவனார். எச்சதத்தனின் உணர்வழிந்தது. கோபம் உருவம் பெற்றதுபோலானன். அருமருமணியை அளித்த அரவு இன்று கருவிடத்தை அளிக்கும் அரவாயிற்று. குராவினின்றும் கீழிறங்கினன். கையிற் தண்டினால் மைந்தனைப் புடைத்தனன். மைந்தர் திருமுதுகிற் புடைத்து வைசொல்லுங் கூறினன். சிவபூசனையில் மனம் அழுந்திய "சிந்தைபுகுந்த தூநாதர்" மணடுகாதல அருச்சனையின்மேல் மனஞ் செலுத்தியவராக அமர்ந்திருந்தனர். நிர்மலக் கண்ணுதலினார், மெய்யன்புடைய பக்தர், பாசநீக்கர், கனமுடையார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், செவ்வி அருமைய பக்தர், அவமதிப்புங் கொள்ளார், அவ்வவர் சிவார்ச்சனையில் ஈடுபட்டிருந்த அவர்க்குத் தாம் செய்யுங் கருமத்திலன்றித் தந்தையார் தமக்குச் செய்யுங்கருமஞ் சிறிதும்புலப்பட்டிலது. அலைமையுங் புகுகின்ற அவர் மனத்துள் "அருமை விளக்கும் ஒருவடிவாம் எச்சதத்தன்" புரியுந்துன்பங்கள் புகுதற்கு இடம் பெறுமா? "பாலிற் றிருமஞ்சனம் ஆட்டும் பணியிற் சலித்திலா பாலகனார்" தன் செயலற்றபவர்களுக்கு நற்றந்தையார் கடுங்கோபமுற்றனன். உடனே "திருமஞ்சனக் குடப்பால் காலால் இடறிச் சிந்தினான். அக்கணத்தில் அங்ஙனஞ் செய்தவன் தந்தையே என்பதை அறிந்தான். அம்மறையோர் திருமகனார் ஆதும் செவ்வி நிறைந்த விசாரசருமருக்குச் சிவார்ச்சனை புரிகின்ற தந்தையார் பெரியவனும் தந்தையினது பாதம் குடம்புடைய கால்களைத் துணித்தல் பொருளாக எண்ணிவிட்டனர். பக்கத்தே கிடந்த கோல் ஒன்றைக் கையில் எடுத்தார். சிவனருளால் அதுவும் மழுவாயிற்று. தாதை தாளிணை எறிந்தனர். எச்சதத்தன் மண்மேல் வீழ்ந்தான். சிவார்ச்சனைக்கு இடையூறாக நின்ற தாதையின் தாளிணை துணித்த மைந்தர் மீண்டும் அச்செயலில் ஈடுபட்டனர். இவ்வகைத்தான முதிர்ந்த பக்தியையுடைய பாலகனாரின் செயல்கண்டவையம்பூரித்தயானவர் திருவுள்ளம் காதலரால் வெளிப்பட்டனர். இவ்வத மணல்சேய இறைவன் திருமேனியாக நின்று அர்ச்சனைபுரிந்த அவ

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

இரந்தாள்; எங்கள் செல்வமே, நீ கவலைப்பட வேண்டாம்; அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவ்விடத்தை விட்டு நீங்கினுள் பெற்றவள். விசாலாட்சி சில காலமாகக் காலையில் ஸ்நானம் முடித்துக்கொண்டும், மாலையில் முகம் கை கால் சுத்திகொண்டும், தங்கள் வீட்டிலுள்ள பூசையறைபுட் சென்று தேவியைத் தியானிப்பதும் தேவிக்குரிய சிறந்த பிரபந்தமாகிய அபிராமியந்தாதி முழுவதையும் ஓதுவதும் வணங்குவதும செய்து வந்தாள். அவள் அப்படிக் கிரமமாகத் தேவியைப் பூசிப்பதன் நோக்கமென்ன வென்பதை அவளுடைய பெற்றுருமேயறியார், மற்ருேருமறியார்.

### "உந்தச் சஞ்சலபுத்தியை மறந்துவிடு"

இவை இங்ஙனமாக, அன்று கடற்கரையி லிருந்து வீட்டிற்கு மீண்ட விசுவநாதன் அன்றிரவு தன் தாய் உண்ணும்படி நெருக்கிக் கேட்கவும் உண்ணுதவனுய்த் தன் படுக்கையிற் படுத்தபடி உறக்கமின்றிப் பலவாறு யோசித்துக்கொண்டு கிடந்தான்; பாலசிங்கனைப் போலத் தானும் மதுமயக்கம் அதிகமுற்றவனுய் அந்தச் சமயத்திலிருந்தானுயின் அவன்பட்ட அவமானத்தைத் தானும் படநேர்ந்திருக்குமே யென்று கவலைப்பட்டான்; மறந்திருந்த மைத்துனியையும் அவளுடைய பெற்றேரையும் பற்றி யெண்ணினுன்; இந்த மருமங்க ளெல்லாம் வெளிவந்தால் விசாலாட்சியைத் தான் மணஞ்செய்வது நடவாத கருமமென் றெண்ணிக் கவலைப்பட்டான். பாலசிங்கன் கண்ணில்இனிமேல் தான் எதிர்ப்படுவதில்லையென்று நிச்சயித்தான். தான் கெட்டது பாலசிங்கன் கூட்டுறவாலே, பாலசிங்கன் பழுதுபட்டது வீராசாமியின் சகவாசத்தாலே, ஆனதால் அவர்களிருவரும் பொல்லாதவர்க ளென்று நிச்சயித்துக் கொண்டு ஒரு வாரமாக அந்த இருவர் கண்ணிலும் புலப்படாமல் இபன்ற வரையில் ஒதுங்கி மறைந்து திரிந்தான்; அவன் தன் தாயின் சொல்லுக்கு அமைந்து நடப்பதைக் கண்டு தாயும் உவப்படைந்தாள். இவள் செயல் இவ்வாருக, பாலசிங்கன் தன்னிடம் விசுவநாதன் வராமல் விட்டதையிட்டும் அவன் தன் கண்களில் அகப்படாமல் மறைந்து திரிவதையிட்டும் அதிகம் யோசித்தான்; தன்னை அவன் அறவே கைவிட்டு விட்டானென்று கவலைப்பட்டான; அருணசலம் பிள்ளை குடும்பத்தினர்தாம் தன்னுடன் அவன்கூடித் திரியாதபடி அவனைத் தடுத்துவிட்டார்களென்று நிச்சயம் பண்ணினுன்; விசுவநாதன் தன்னுடன சிநேகம் பண்ணுமல் விருந்தாலும் சண்டாடாதிருந்தாலும் காரியமில்லை, ஆனுல் விசாலாட்சியை அவன் விவாகஞ் செய்யாமல் தடுப்பதற்கு ஏதும் உபாயஞ் சூழ வேண்டுமென்று தர்க்கமாக நிச்சயஞ் செய்து கொண்டு உடனே அவன் வீராசாமியிடம் போய்த் தன் நோக்கத்தை அவனுக்கு வெளியிட்டான். கேட்ட வீராசாமி சிரித்து "எடே, பைத்தியகாரா, அவனுடையகல்யாணத்தைக் குழப்புவதால் உனக்கு ஏதும் நன்மையுண்டா, அதைக் குழப்பிவிட்டு நீ அந்தப் பெண்ணைக் கல்யாணஞ் செய்யப்போகிருயோ? உனக்கும் உன்னுேடு கூடிய எனக்கும உலகத்திலே யாரினும் எப்போதேனும பெண் தருவார்களா? உன்னை ஏதோ படித்தவ னென்றல்லவா இத்தனை காலமும் உன்னைப் பற்றி யெண்ணிவிட்டேன்; நீ அப்படி ஏதும் படித்திருந்தால் அர்த்தப்படிப்பு உனக்குத் தீமைக்கே ஏதுவாயிருக்கிறது; நீ கெட்டாலும நான் கெட்டாலும் எங்களோடு கூடின அவன் நல்லாயிருந்தால் உனக்கு வந்த நட்டமென்ன? ஓ! பாலா, உந்தச் சஞ்சலபுத்தியை மறந்துவிடு; நாளைக்கு என்னேடு மாறுபட்டாலும் நீ எனக்கு இப்படித்தானே கேடு செய்யப் பார்ப்பாய்; அல்லாமலும் குலத்திற் பிறந்த பெண்களை மனம் வருந்தச் செய்யாதே; அன்றைக்குக் கடற்கரையில் அந்தப் பெண்களிடம நீ பட்ட அவமானத்தைச் சிந்தித்தால் நீ அரையிலே துணி கட்டிக்கொண்டு தெருவிலே புறப்பட்டுத் திரிவாயா? உன்னைக் காட்டிலும் அந்தப் பாலசிங்கன் எனக்குநல்லவன்; அவனுக்கு மாருக உனக்கு ஏதும் உதவ செய்யமாட்டேன்; நீ ஏதுந் தீமை செய்யவும் விடமாட்டேன்" என்று தடுத்துச் சொன்னுன்; பாலசிங்கன் ஒன்றுஞ் சொல்லாமல் [illegible] யோசித்தான.

வரும்.

## புதிய கல்வித் திட்டம்

விசேஷ கல்விச் சபையாரால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித் திட்டத்தைச் சிறந்ததென்று இங்குக்கள் கருதுகிருர்கள். இக்கல்வித்திட்டம் ஒவ்வொரு சமயத்தினரும் தம் சமயப் பிள்ளைகளின நலத்தைப் பேண இடமளிக்கின்றது; ஆனல் சமய மாற்றஞ் செய்யும் எண்ணமுள்ள சமயத்தவர்கள் ஏனைய சமயத்துப் பிள்ளைகளைத் தம் சமயத்துக்கு மத மாற்றஞ் செய்துகொள்ளுதற்கான வசதிகளை முற்றுக நீக்கிவிடவில்லை. அரசாங்கக்கல்வி சர்வசம்மதமுள்ளதாயும், உபயோகமுள்ளதாயுமிருக்க வேண்டுமானுல் செலவை உண்டாக்கும், எல்லா ஆசிரியரும் அரசாங்க உத்தியோகத்தராக மாற நேரிடுமாகையால ஆசயற்றுறைகளில் வழிகாட்ட இலங்கை விவேகிகள் உபயோகப்படவும் மாட்டார்கள்.

இப்போதுள்ள கட்டாய இலவச சிங்கள, தமிழ், கல்வியோடு, கட்டாய இலவச ஆங்கிலக்கல்வியும் அளிக்கப்பட்டால், மாடுபோல் நடவாது தன்னிஷ்டப்படி நடக்கும ஒரு வகுப்பினை ஆக்கிவிடும்,

சம்பளம் பெற்றுக் கற்பித்தும் பாடசாலைகள் — விசேஷமாய் விடுதிப்பாடசாலைகள் மதமாற்றஞ் செய்வதற்கு மிக வசதியுள்ள இடங்களாயிருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே மனச்சாட்சியை விற்றுலதான் ஏழைகள் ஆங்கிலக் கல்வியை ஒருவிதம பெற்றுக்கொள்ள முடியும்.

பெரும்பாலான பெரிய ஆங்கிலக் கல்லூரிகள் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய பகுதிப்பணத்தையும், தளபாடம் முதலானவற்றுக்குரிய செலவுகளையும, மாணவர்களிடம் பெற்றுக்கொள்ளும் பணத்திலிருந்து கொடுத்தபின்னர் ஒவ்வொரு வருடமும் பெருந்தொகையான பணத்தை மிச்சமாய்ப் பிடித்துக்கொளவது தெரிந்த விஷயம. அதிக பணத்தை மாணவர்களிடமிருந்து அறவிடுவதாலேதான இது முடிகிறது. ஒருவித அதிகாரமும் இல்லாதவர்களும் ஒன்றுமறியாதவர்களுமான பெற்ருர்மீது இவ்வரியை விதிக்க அனுவதிப்பது ஒருஜனநாயக அரசாங்கத்துக்கு நீதியாகுமா? பிரதிநிதித்துவமின்றி வரியறவிடுதல் கூடாது.

ஆங்கில வித்தியாசாலைகளின் முகாமைக்காரர்கள பெறுவது

### கதிர்காம உற்சவம்

ஆடி மாசம் 5உ வியாழக்கிழமை கதிர்காமத்தலத்தில் மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெறும்.

"கோட்" பிரமாணத்தின் 30ம் பிரிவிற் கூறியவாறு "உபாத்திமார் சம்பளத்துக்கும் முகாமைக்காரர் நன்கொடைக்கும்" உள்ள வித்தியாசம் என்றிராது "உபாத்திமார் சம்பளத்துக்கும் முகாமைக்காரர் நன்கொடைக்குமுள்ள வித்தியாசத்துக்கு மேற்படாததொகை" என்றிருத்தல் விரும்பத்தக்கது. இது "கோட்" பிரமாணத்தில் 30ம் பிரிவில் சிறியமாற்றஞ் செய்வதால் பெறக்கூடும். கௌரவ மந்திரியும் அவருடைய கொமிற்றியும் இதை பதின்மூன்று வருடங்களுக்கு முன்னரே செய்திருக்கலாம். அன்றேல் 1939ம் ஆண்டு கல்விப்பிரமாணங்கள் புதுப்பிக்கப்பட்டபோது செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் பல பெற்ருர் மிக்க பணத்தை மிச்சம பிடித்திருப்பார்கள்; ஆங்கிலக் கல்வி இப்போதும்பால அதிகசெலவுள்ளதாய் இராது.

எதிர்ப்பை ஒழிப்பதற்கும்; அதிக பணத்தை மிச்சம்பிடிக்கும் வித்தியாசாலைகளின் முகாமைக்காரர்கள முணுமுணுப்பதை ஒழிப்பதற்கும் ஏற்றதாய் உதவி நன்கொடையானது முன கூறியவாறு "உபாத்திமார் சம்பளத்துக்கும் முகாமைக்காரர்கள் நன்கொடைக்கும் உள்ள வித்தியாசத்துக்கு மேற்படாத தொகையாய் இருத்தல் வேண்டும்" என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். இதை ஏற்றுக்கொண்டால் முகாமைக்காரர்கள் பிள்ளைகளிடஞ் சம்பளம் பெறலாம் என்று கூறுவேன். ஏனெனில், எல்லா முகாமைக்காரர்களும் அரசாங்க நன்கொடைபெற்று இலவசக்கல்வி கற்பிக்கத் தாமே முன்வருவார்கள். எந்த முகாமைக்காரர்களாவது வித்தியாசாலையை வருவாய் தரும் இடமாகக் கருதுவது சரியலல.

பிள்ளைகளை எப்பருவத்திலே பகுக்கவேண்டும்? யார் பகுக்க வேண்டும்? என்பனவற்றை அதற்குப் பொறுப்பாயுள்ள எவரும் சிறிது சாமர்த்தியத்தோடும் பொது அறிவோடும் முரண்பாடின்றிக் கண்டுகொள்ளலாம. இறுதியில அனுபவம் எல்லோருக்கும் திருப்தியளிக்கும். பொது அறிவோடு திருப்திகரமாய்ச் செய்து முடிக்கக் கூடிய வேறு விடயங்களும பலவுண்டு.

அரசியல் நிபுணர்கள் செய்வது போல் பண நிலைமையையுங் கவனித்தே காரியங்கள் செய்யப்பட வேண்டும். சாவதானம மிகவும் நல்லது.

இங்கிலாந்திலே குருமார் எவ்வித படிப்பித்தலுக்கும் சம்பளம் பெறுவதில்லை என்று சென்ற் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரான ஸ்ரீமான. நேசையா அவர்களிடமிருந்து அறிகிறேன. அப்படியானுல் இலங்கையில் அது ஏன வேறுயிருக்க வேண்டும்? மற்றைய ஆசிரியர்களுக்கு அவர்கள எந்தப்பகுப்பைச் சேர்ந்த பாடசாலையிற கற்பித்தாலும அவர்களது தராதரத்துக்குரிய சமபளம் கொடுக்கப்படவேண்டும. அன்றேல் அவர்களுக்கு மனத்திருப்தியிராது.

அரசாங்கசபையும், மந்திரிமாரும் தஙகள் கடமைகளை இவ்வாறு போகும மக்களுக்குச் செவ்வனே செய்து வைப்பாரகளெனநாடுஎதிர்பார்க்கின்றது.

இ. இராசரத்தினம்.

வ. வி. வி. ச.

யாழ்ப்பாணம் 9-7-44

## கதவில்லாத புகைவண்டிகள் அதிகரிக்கின்றன

### புதுக்கதவுகள் போடுவது கஷ்டமாக இருப்பதேன்?

கதவுகள் இல்லாத புகைவண்டிகளின் தொகை அதிகரித்து வருகிறது. உடையும் கதவுகளைப் பழுதுபார்த்து மீண்டும் கதவுகள் வெகு துரிதமாக டைக்கப்பட்டு வருகின்றன.

இக் கதவுகள் உடைவதற்குப் பிரதான காரணம் மிதி பலகைகளில் நின்றுகொண்டு செல்லும் பிரயாணிகளேயென்று சொல்லப்படுகிறது. அவர்களின் அஜாக்கிரதை காரணமாகப் பாதிக்கதவுகள் வேண்டுமென்றே உடைக்கப்படுகின்றன. அவர்கள் கதவைப் பாதி திறந்துவிட்டு அதில் தொங்கிக்கொண்டு பிரயாணஞ் செய்கின்றனர். இறங்கும்போது கதவுகளை அடிக்கொண்டிருக்க விட்டுவிடுவதால் எதிர்த்திசையிலிருந்து வரும் புகைரதங்களோடு பலமாக மோதுகின்றன.

### விபரீத விளையாட்டு

புகைரதப்பாதைகள் நெருங்கிச் செல்லும் சில இடங்களில் ஒரு புகைரதத்தின் கதவுகள் மற்றப் புகைரதத்தோடு மோதட்டுமென்றே பிரயாணிகள் புகைவண்டிக் கதவைத் திறந்து வைத்திருக்கின்றனரென்று சொல்லப்படுகிறது. இத்தகைய செய்கையால் சில தினங்கட்கு முன்னர்க் கும்பனித் தெருவில் இரண்டு புகைவண்டிக் கதவுகள் சுக்குநூருக உடைந்து போயின. புகைரதப் பாதைகள ஒன்ருேடொன்று நெருங்கியிருக்குமிடங்களை மிதிபலகைகளிற் பிரயாணஞ் செய்பவர்கள் அறிவித்திருக்கின்றனரென்றும இந்த விதத்திலே புகைரதக் கதவுகள் நொறுங்குவதைப் பார்ப்பது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதென்றும் தெரிகின்றது. இத்தகைய காரியம் செய்வதைக் கண்டித்த பிரயாணிகளை மேற்படி விஷமிகள் சிரித்துப் பரிகாசஞ் செய்கின்றனரென்று சொல்லப்படுகின்றது.

கதவு இலலாத வண்டிகளில் பெரும்பாலானவை களனியாப் பாதையில போக்குவரத்துச் செய்கின்றன. இப்பாதையில கதவுகள மிகவும் அதிகமாகச் சேதமடைகின்றன. இந்தக் கதவுகளில்லாத வண்டிகளிற் பிரயாணஞ் செய்பவர்களிற் பெரும்பாலானோர் திறந்துகிடக்கும வாசலுக்குச் சமீபத்தில் உட்கார அஞ்சுகின்றனர். புகைரதம குலுக்குமபோது ஆசனத்திலிருந்து புகைரதப்பாதையில் வீசப்படுவிடலாமென்று அவர்கள கருதுகின்றனர்.

### கதாப்பிரசங்கங்கள்

கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவின்கீழ் அச்சுவேலி சைவத் தருவாளர் ஆ. க. தம்பிமுத்து அவர்களால் ஆனிமாசம் ௧௯ந் திகதி (2-7-14) ஞாயிற்றுக்கிழமை மேட்டுத் தெருவிலுள்ள ஷ சபை மண்டபத்தில பக்த மார்க்கண்டேயர் சரித்திரமும் ஆனிமீ 25உ (8-7-44) சனிக்கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில பக்த நந்தனார் சரித்திரமும் பக்கவாத்திய சகிதம கதாப்பிரசங்கமாக நிகழ்த்தப்பட்டன. இரு கூட்டங்களிலும் அநேக அன்பர்கள் சமுகமளித்து கதாப்பிரசங்கங்களைக் கேட்டு ஆனந்தமுற்றுச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "யான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன்"

(சி. ஆறுமுகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

புலவர் கூட்டத்துள் அஞ்சா நெஞ்சம் படைத்தவர் பெருஞ் சித்திரனார்தான். புறநானூற்றைப்புரட்டும்போதெல்லாம் அவரைப்பற்றிய நினைவுதான்வருகிறது. அதியமான் நெடுமானஞ்சி இணையற்ற வள்ளல். தமிழ்ச்சுவை தெரிந்தவன். புலவர் ஒருநாள் அதியமானிடம் போனார். அப்போது அரசன் ஏதோ இன்றியமையாத காரியத்தில் ஈடுபட்டிருந்தான். புலவரை நேரிற் கண்டுபேசுதற்கு நேரங் கிடைக்கவில்லை. தன்னை நாடிவந்த புலவரை அசட்டை செய்யக்கூடாதென்று எண்ணினான். உடனே அவருக்கு ஏற்ற பரிசிலை ஓர் ஏவலாளனிடம் அனுப்பினான். ஏவலாளன் பரிசிலைக் கொணர்ந்து புலவர்முன் வைத்து 'ஏற்றுக்கொள்ளுங்கள்' என்றான். புலவர் அளவற்ற சீற்றங் கொண்டார். 'வாயிலில் வந்துநின்று பிச்சை கேட்கும் பிச்சைக்காரனுக்குப் பிச்சைபோட்டு அனுப்புவதுபோல இவற்றை அனுப்பிப் போய்விட்டு வரும்படி சொல்லுகிறான் போலிருக்கிறது!' என்று எண்ணி உள்ளங் கொதித்தார். 'எனக்கு வேண்டியது இப்பரிசில் என்று எப்படித்தான் இவன் நிச்சயம் பண்ணினானோ! பணத்துக்காக வருவதும், வந்தவரையில் இலாபமென்று பெற்றுக்கொண்டு போவதும் வியாபாரியின் தன்மையல்லவா? நான்என்ன, வியாபார நோக்கத்துடனேயா இங்கே வந்தேன்!' என்று ஆழ்ந்து ஆலோசித்தார்.

"அரசன் இவற்றை ஏற்றுக்கொள்ளச் சொன்னான்" என்று ஏவலாளன் பின்னரும் புலவருக்கு ஞாபகப்படுத்தினான். பெருஞ் சித்திரனார் பெருமூச்சுவிட்டார். ஆர்ப்பரித்தார். பேசத் தொடங்கினார். "எண்ணுதற்கரிய பலகுன்றுகளும் மலைகளும் பின் கழிய வந்திருக்கிறேன். வள்ளல் அதியமானை நேரிற் கண்டு பரிசில் வாங்கிச் செல்லலாமென்றுதான் வந்தேன். வந்து இங்கே நிற்கின்றேன். ஆகா! உங்கள் அரசனின் அன்பு இருந்தவாறென்னே! என்னிடம் விருப்பங்கொண்டு "இப்பரிசிலைப் பெற்றுக்கொண்டு அப்படியே போய்வருக" என்று சொல்லி யனுப்பியிருக்கிறானே! என்னுடைய தன்மையை அவன் எப்படி அறிந்து கொண்டானோ! நல்லது; அரசனிடம் நான் கூறுமிதனைத் தெரிவிப்பீராக! அரசன் என்னையழைத்து நேரே காணாமல் தந்த இப் பொருளைப் பெற்றுக் கொண்டுபோவதற்கு நான்ஓர் ஊதியங்கருதும் வியாபாரி அல்ல; வாணிகப்பரிசிலன் அல்லேன். விரும்பி அழைத்து என்னை உபசரித்துத் தகுதி தெரிந்து பரிசு வழங்கினால் அது தினையளவாயினும் இனிது. இதனை உங்கள் அரசன் அறிந்து கொள்ளட்டும்" இவ்வாறு தமிழ்ப் புலவனின் உள்ளத்திலிருந்து வீரக்கனல்வீறிட்டெழுந்தது; வீரவார்த்தைகளை அள்ளி வீசியது. புலவனின் வாய்மொழியைப் பார்ப்போம்.

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்றவென் னயந்தருளி 'ஈதுகொண்
டீங்கனஞ் செல்க தான'னென் னன்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்!
காணாதீத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர்விடினே"
(புறம் 208)

திணை:-பாடாண்டிணை

துறை:-பரிசிற்றுறை

இப்பாட்டின் உயிர்நாடியாக வுள்ளது "வாணிகப் பரிசிலன் அல்லேன்" என்னுந்தொடர். அத் தொடர் தமிழரின்உள்ளத்தின் உயர்வை "உள்ளங்கை நெல்லிக் கனி" போற் காட்டுகின்றது. பழந்தமிழ்ப்புலவன் ஈதலையும் ஏற்றலையும் எத்துணைத் தூய்மையினவாகக்கொண்டுள்ளான் பாருங்கள்!

## பத்தி முதிர்ந்த பாலகனார்

4-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கு, இறைவனே நேரிற் காட்சியளிப்பானெனின், அவரின் உளமகிழ்ச்சிக்கு எல்லைகூறமுடியுமா? தேவியொடு இறைவன் காட்சியளித்தலும், "கண்டு தொழுது மனங்களித்து - பாதமலர்கள் மேல் விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனா" சிவபெருமானது திருக்கைகள் தீண்டப்பெற்ற சிறுவர் சிவமயமாக மிக்கெழுந்த திருவருட் சோதியில் மீதான்றினர்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி யூலை 14

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி எஸ் லோகநாதன்பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 டி எஸ் லோகநாதன்பாட்டு 2 தமிழில்செய்திகள் 2–05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 5-40 தூரான்ஷரீப் 6 பி என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் † 8 பி என் அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 8-45 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனலிருந்துசெய்திகள் 9-45 உலகவிவகாரங்கள் ஆங்கலம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### சனி யூலை 15

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழ்செய்திகள் 8 என் கேஸி புல்லாங்குழல் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலைக்கதம்பம்† 9 முடிவு.

1 எஸ் ராமசுப்பய்யர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செதிகள் 1-40 கதம்பம் 2 தமிழில் செய்திகள் 2-05 மூவாளூர் எஸ் செல்லப்பாபாட்டு 2-30 முடிவு.

மாலை 5 எஸ் ராமசுப்பய்யர்வயலின் 5-40 ஸ்கந்தபுராணவிளக்கம் 6 மூவாளூர் எஸ் செல்லப்பா பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஜப்பானை ஆராய்வோம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 9-15 கானன் தேவி† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 துயில்இசை† 10 யழ... 10-30 முடிவு.

## ஹிட்லர் முசோலினி பற்றி ஜோஸ்யம்

லண்டன் ஜூலை 8—

ஹிட்லரும் முசோலினியும் தங்களைத் தப்பித்துக் கொள்வதற்காக ஜப்பானுக்கு ஓடிவிடுவார்கள் என்று இத்தாலித் தலைநகரான இஸ்தம்புல் வட்டாரத்தில் கூறப்படுகிறது. எதிரிகள் கையிற் சிக்காமலிருக்கவே இந்த இரு சர்வாதிகாரி நண்பர்களும் இம்மாதிரித் திட்டம் போட்டிருக்கின்றனராம்.

## கமத் தொழிலாளர் சங்கம் நீர்வேலி

இச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒன்று 5-7-44 இல் மாலை 5 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கூடியது. அப்பொழுது திரு. கு. சிற்சபேசன் அவர்கள் தலைமை வகித்தார்கள். சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர் பின்வருமாறு தெரியப் பெற்றனர்.

1 தலைவர், திரு. கு. சிற்சபேசன் (கோப்பாய் பிரிஸ்ரர்) 2 உபதலைவர்கள்: திரு. க. ஆறுமுகம் (ஆசிரியர்) திரு M. வேலாயுதர் (சிறுப்பிட்டி K. V.) 3 இணைக்காரியதரிசிகள்:- திரு. த. அரியகுட்டிப்பிள்ளை (நீர்வேலி, A. R P. ஹெட்வாடன்) திரு. சி. க வேலாயுதபிள்ளை 4 தனதிகாரி S. நடராசா (தலைமையாசிரியர் நீ. அ. இ) 5 இவர்களுடன் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபையின் நாமாவலிகள் வருமாறு: திருவாளர்கள் (நீர்வேலி) வி. வேலுப்பிள்ளை ஆசிரியர், பூ. தம்பிப்பிள்ளை (V. C. N.) பெ. கந்தப்பிள்ளை, சி. அப்புத்துரை (ஆசிரியர்), பே. தம்பையா (ஆசிரியர்), பொ. மாணிக்கம், N. சிதம்பரநாதர் (சிறுப்பிட்டில்) க. அருணாசலம் (ஆசிரியர்), M. சுவாமிநாதர் (கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலை மானேஜர்) ப. தில்லையம்பலம் வ. சதாசிவம் (கோப்பாய்), வே. பொன்னம்பலம்; சி. ஆறுமுகம் (கோப்பாய் பி. நொத்தாரிஸ்) க. இராசதுரை, V. மார்க்கண்டு ஆசிரியர் (கோப்பாய்) N.S முருகேசு (ஆசிரியர்) M. நாகலிங்கம் (கோப்பாய்), முதலியோராகும்.

சென்ற வருட உத்தியோகஸ்தர்களுக்குத் நதி கூறப்பட்டது. இச் சங்கத்துக்கு அரசாட்சியாரால்கொடுக்கப்பட்ட விதை மல்லியை சரியான முறையில் உபயோகிப்பதற்காகத் திரு. வி. வேலுப்பிள்ளை ஆசிரியர் அவர்களும், திரு. த. அரியகுட்டி (L. A. C. காரியதரிசியும் A. R. P. வாடனும்) அவர்களும் திரு. சி. க. வேலாயுதபிள்ளை யவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். —நிருப.

## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944-ம் ஆ யூலைமீ 17-ந் திகதித் திங்கட்கிழமை முதல் 23 ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 கடலைப்பருப்பு 2 அவுன்ஸ்
2 புளி கால் அவுன்ஸ்
3 நற்சீரகம் கால் அவுன்ஸ்
4 வப்பாய் வெங்காயம் 3 அவுன்ஸ்

(2) தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. இசவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக.
யாழ்ப்பாணம் கச்சேரி
11—7—44.

G 47 13—7—44

## கொழும்பு விவேகானந்த சபை

ஷ சபையாரால் தாரண வருஷ பங்குனிமீ (April 1945) நடத்தப்பெறவிருக்கும் சமயபாடப் பரீக்ஷைக்குரிய பாடவிதானம்

### கீழ்ப் பிரிவு

1. சைவவினாவிடை முதற்புத்தகம்—நாவலர், அல்லது சைவபோதம் முதற் புத்தகம் — திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள்இயற்றியது. 2. திருவருட்பாத் திரட்டு—விவேகானந்தசபை வெளியீடு 1942—43ம் ஆண்டுகட் குரியது கீழ்ப் பிரிவுக்குரிய பாகம் மட்டும்.

### மத்தியபிரிவு

1. சைவபோதம் இரண்டாம் புத்தகம்—திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியது அல்லது சைவப்பிரகாசிகை 5ம் புத்தகம்—பிரமஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் இயற்றியது. 2. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்—திரு. ம. வே. திருஞானசம்பந்தன் அவர்கள் இயற்றியது (பக்கம் 1—85) 3. திருவருட்பாத்திரட்டு விவேகானந்தசபை வெளியீடு 1942—43ம் ஆண்டுகட்குரியது. மத்தியபிரிவுக்குரிய பாகம்மட்டும்.

### மேற் பிரிவு

1. திருவருட்பயன் — திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றிய உரையுடன். 2. கந்தபுராணவிளக்கம் —திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியது. 3. திருவாசகமணிகள்—திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் இயற்றியது. (திருச்சதகம் முதல் பிடித்தபத்துவரை) சபை வெளியீட்டில் பக்கம், 17—66.

குறிப்பு: மேலே பரீக்ஷைகளுக்குக் குறிப்பிடப்பட்ட புத்தகங்கள் எல்லாம் கொழும்பு விவேகானந்த சபைப் புத்தகசாலையில் பெறற்பாலன.

சு. சிவசுப்பிரமணியம்,
சர்வ விஷயக் காரியதரிசி,

## அற்றோணி தத்துவ அழித்தல்

யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள நியூ மோட்டா ஸ்டோர்ஸ் சொந்தக்காரரான இப்ராஹீம்மோட்டாவாகிய நான் எனது வாடிக்கைக்காரருக்கும், வியாபாரிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்வதாவது:

1942ம் ஆண்டு மேமீ 2-ந்திகதி திரு. M. R. காராளசிங்கம் நொத்தாரிசுவால் 181ம் இலக்கத்தின்கீழ் முடிக்கப் பெற்று நான் இந்தியாவிலிருந்து திரும்பும் வரை என் வியாபாரத்தை நடத்துதற்காக உடுவிலைச் சேர்ந்த மிஸ்றர். ஜேம்ஸ் சின்னப்பு சின்னத்துரைக்கு என்னால் கொடுக்கப்பெற்ற அற்றோணி தத்துவத்தை 1944ம் ஆண்டு யூலைமாசம் 7ந் திகதியாகிய இன்று எடுத்துக்கொள்வதோடு அழித்தலும் செய்துவிடுகிறேன். இந்த அழித்தல் திகதியன்றோ அதன் பின்னரோ குறித்த என் அற்றோணியின் செயல் ஒன்றுக்கும் நான் பொறுப்பாளியாகமாட்டேன் என்பதையும் சம்பந்தப்பட்டோரனைவர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்ராஹீம் மோட்டா,
J. S சின்னத்துரை.
நியூ மோட்டா ஸ்றோர்ஸ்,
யாழ்ப்பாணம், 7-7-44.
Mis 73 13-7-44

உங்கள் கண்கள் விலையுயர்ந்தவை
உங்கள் கண்ணாடிகளைக் கீழ்க்காணும்
பிரசித்திபெற்ற கம்பெனியில்
வாங்குங்கள்!

வீனஸ் ஒப்ரிக்கல் கம்பெனி
28, பெய்ன ஸ்ட்ரீட், யாழ்ப்பாணம்.
Mis 60 31—7—44&.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 13, July, 1944

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org